நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2025

## இடைநிலை கீழ்ப்பிரிவு (ஆண்டு 5 & 6)

## Intermediate Lower Level (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள்

**Time Given : 75 Minutes**

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்துப் பதிலளிக்க வேண்டும்.
ஆசிரியர் வாசிப்பதில் உதவி செய்யலாகாது.

**Aug 2025**

1 – 10 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(2 x 10 = 20 Marks)

1. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலைப் பாடிய புலவர்

(அ) பாரதியார் (ஆ) கம்பர் (இ) கணியன் பூங்குன்றனார் (ஈ) திருவள்ளுவர்

2. இராமன் காட்டுக்குச் செல்லும்போது கங்கை நதியைக் கடக்க உதவியவர்

(அ) இலக்குமணன் (ஆ) அனுமான் (இ) பரதன் (ஈ) குகன்

3. இராவணன் சீதையை எங்கே சிறை வைத்தான்?

(அ) அசோகவனத்தில் (ஆ) அரண்மனையில் (இ) வீட்டில் (ஈ) தமிழ்நாட்டில்

4. கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையின் உயரம்

(அ) 120 அடி (ஆ) 1330 அடி (இ) 180 அடி (ஈ) 133 அடி

5. கற்புக்கரசி கண்ணகியின் கதையைக் கூறும் நூல்

(அ) திருக்குறள் (ஆ) ஆத்திசூடி (இ) சிலப்பதிகாரம் (ஈ) மணிமேகலை

6. பண்டைய காலத்தில் பல குடும்பங்கள் ஒன்றிணைந்து வாழ்ந்து வந்தார்கள்.
அவ்வாறு வாழ்வதை எப்படி அழைப்பது?

(அ) தனிக்குடித்தனம் (ஆ) கூட்டுக்குடும்பம் (இ) தனி வாழ்க்கை (ஈ) குடும்பம்

7. தமிழ்க் குடும்பத்தின் பண்புகளில் ஒன்று

(அ) பெற்றோரைப் பேணிக் காத்தல் (ஆ) பெரியோரைக் கனம் பண்ணுதல்

(இ) விருந்தினரை உபசரித்தல் (ஈ) மேற்கூறியவை எல்லாம்

8. விழாக்கள் ஏன் கொண்டாடப்படுகின்றன?

(அ) உழைத்துக் களைத்த மக்களுக்கு ஓய்வையும் உற்சாகத்தையும் வழங்குவதற்கு

(ஆ) உறவினர்கள் நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக உண்பதற்கு

(இ) சிறுவர்கள் நாங்கள் எமது நண்பர்களுடன் மகிழ்ச்சியாக விளையாடுவதற்கு

(ஈ) மேற்கூறிய எல்லாம் சரி

9. 'கிளித்தட்டு', 'கபடி' என்பன

(அ) தமிழர்களின் விளையாட்டுகள் (ஆ) சீனரின் விளையாட்டுகள்

(இ) யாரும் விளையாடுவதில்லை (ஈ) ஆங்கிலேயரின் விளையாட்டுகள்

10. கல்வியை எவ்வாறு கற்க வேண்டும்

(அ) வாசித்தல் போதும் (ஆ) ஆழமாகச் சிந்தித்துக் கற்க வேண்டும்

(இ) இணைய பக்கங்களை படித்தால்ப் போதும் (ஈ) நுனிப்புல் மேய்வதுபோல் படித்தால்ப் போதும்

11 – 12 வரையுள்ள வாக்கியங்களில் கோடிட்ட சொற்கள் எந்தக் காலத்தைக் குறிக்கின்றன?

(2 x 2 = 4 Marks)

11. நாங்கள் நண்பர்களுடன் போன விடுமுறைக்குக் கன்பராவுக்குச் சென்றோம்.

(அ) நிகழ்காலம் (ஆ) எதிர்காலம் (இ) இறந்தகாலம்

12. மாமா நாளைக்கு எங்கள் வீட்டுக்கு வருவார்.

(அ) நிகழ்காலம் (ஆ) எதிர்காலம் (இ) இறந்தகாலம்

13 – 15 வரையுள்ள வாக்கியங்களில் கோடிட்ட சொற்கள் எதைக் (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்) குறிக்கின்றன?

(2 x 3 = 6 Marks)

13. தோட்டத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

(அ) பயனிலை (ஆ) செயப்படுபொருள் (இ) எழுவாய்

14. ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுரைகளைக் கூறினார்.

(அ) செயப்படுபொருள் (ஆ) பயனிலை (இ) எழுவாய்

15. நாங்கள் கலைவிழாவில் நடனம் ஆடினோம்.

(அ) எழுவாய் (ஆ) பயனிலை (இ) செயப்படுபொருள்

16 – 23 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(2 x 8 = 16 Marks)

16. கைகொடுத்தல் எனும் மரபுத்தொடர் விளக்குவது?

(அ) திறமையை வெளிப்படுத்தல் (ஆ) முயற்சி செய்யாமல் தடுத்தல்

(இ) துன்பத்தில் உதவி செய்தல் (ஈ) வருந்துதல்

17. பாடசாலையின் தலைவர் அதிபர் போல, பல்கலைக்கழகத்தின் தலைவரை எப்பெயர் கொண்டு அழைப்பர்?

(அ) துணை வேந்தர் (ஆ) வேந்தர்

(இ) உப அதிபர் (ஈ) பேராசிரியர்

18. 25ம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா எது?

(அ) பொன் விழா (ஆ) காகித விழா

(இ) இரும்பு விழா (ஈ) வெள்ளி விழா

19. முக்கனிகள் என்று அழைக்கப்படும் பழங்கள் எவை?

(அ) ஆப்பிள், மாம்பழம், தோடம்பழம்

(ஆ) மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்

(இ) தோடம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்

(ஈ) கொய்யாப்பழம், பப்பாளிப்பழம் (பப்பாசிப்பழம்), அன்னாசிப்பழம்

20. ஆடு கத்தும் என்பது போல, சேவல் ___________

(அ) கூவும் (ஆ) கீச்சிடும்

(இ) கொக்கரிக்கும் (ஈ) அகவும்

21. கதை, கட்டுரை எழுதுபவர் ___________

அ) எழுத்தாளர் ஆ) ஓவியர்

இ) வியாபாரி ஈ) மாலுமி

22. மலைகள் என்பது ___________

(அ) ஆண்பால் (ஆ) பெண் பால்

(இ) பலர்பால் (ஈ) பலவின் பால்

23. சோறு தமிழரின் பாரம்பரிய உணவு – சோறு என்பதன் ஒத்த சொல் ___________

(அ) இடியப்பம் (ஆ) புட்டு

(இ) சாதம் (ஈ) எல்லாம் சரி

**24 – 25 வரையுள்ள சொற்களைச் சேர்த்தெழுதுக.** **(3 x 2 = 16 Marks)**

24. பால் + சோறு = ___________ 25. கல் + குகை = ___________

**26 – 28 வரையுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.** **(3 x 3 = 9 Marks)**

26. காலைக்காட்சி = ___________ 27. துள்ளிக்குதித்தான் = ___________ 28. பூமரங்கள் = ___________

**29 – 31 வரையுள்ள வாக்கியங்களில் அடைப்புக்குறிக்குள் உள்ள சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

**(3 x 3 = 9 Marks)**

29. மாணவர்கள் வரிசையில் ( நின்றார்கள் / நிண்றார்கள் ).

30. நான் ( கலைவிழாவில் / களைவிழாவில் ) நடனம் ஆடினேன்.

31. அம்மா தேநீரில் சீனியைக் ( கரைத்தார் / கறைத்தார் ).

**கீழ்வரும் ஆண் பால் சொற்களுக்குரிய பெண்பால் சொற்களை எழுதுக** **(3 x 2 = 6 Marks)**

32. அழகன் = ___________ 33. ஒருவன் = ___________

34 – 37 வரை உள்ள வினாக்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள வாழை மரத்தின் கதையை வாசித்துப் பொருத்தமான பதிலை எழுதவும். (3 x 4 = 12 Marks)

வாழை மரம் கதை சொன்னால்...

இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் நானும் எனது குடும்பமும் இருக்கிறோம். நாங்கள் கதலி என்னும் இனத்தை சேர்ந்தவர்கள்.



ஒரு வீட்டுத் தோட்டத்தில் நாங்கள் வாழ்கிறோம். எங்களுக்குப் பக்கத்தில் கப்பல்,மொந்தன், இதரை என்னும் இனத்தவர்கள் பலரும் வாழ்கிறார்கள். வீட்டுக்காரர் நல்ல பசளையிட்டு நீர் பாய்ச்சி எங்களை வளர்க்கிறார். அதனால்,நாங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழித்து வளர்கிறோம். வீட்டுக்காரர் எங்கள் செழிப்பைக் கண்டு மகிழ்வார். நாங்கள் வாழும் காலத்தில் எங்கள் இலை, பூ, காய், பழம், மடல் என்பவற்றை உங்களுக்கு தந்து உதவுகிறோம்.அதனால் எங்களை நீங்கள் ஒரு பொழுதும் மறக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன். பிள்ளைகளே! நீங்களும் பிறருக்கு உதவி செய்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

34. வாழை மரத்தில் என்னென்ன இனங்கள் உள்ளன?

35. வாழை மரத்தை எவ்வாறு வளர்க்கிறார்கள்?

36. வாழை மரம் எவற்றை எமக்கு தந்து உதவுகிறது?

37. வாழை மரம் உங்களுக்கு கூறும் அறிவுரை என்ன?

கீழே கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தை வாசித்தது 38–40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடை எழுதுக.

(4 x 3 = 12 Marks)




38. இந்த விளம்பரம் எதற்குரியது?

39. உணவகத்தின் பெயர் என்ன?

40. இந்த உணவகம் எங்கு அமைந்துள்ளது?